தமிழ்நாடு அரசு

# இரண்டாம் வகுப்பு

## முதல் பருவம்

## தமிழ்

## ENGLISH

## கணக்கு

## சூழ்நிலையியல்

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
(பொதுப்பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட முப்பருவநூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககம்
கல்லூரிச்சாலை, சென்னை – 600 006.

நூல் வடிவமைப்பு : எஸ். மாரீஸ்

அட்டை ஓவியம் : அரஸ்

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்
கல்லூரிச்சாலை, சென்னை – 600 006.

விலை : ரூ.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண்– பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

### SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

### AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்

## தமிழ் (1–40)


| பாட எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | பசுவும் கன்றும் | 3 |
| 2. | பந்து எங்கே...! | 6 |
| 3. | யார், யார், யார் ? | 9 |
| 4. | தவளையின் தந்திரம் | 13 |
| 5. | பார்ப்போம் படிப்போம் | 15 |
| 6. | வீடு எங்கே! | 23 |
| 7. | என்னைப் பற்றி நானே... | 25 |
| 8. | சேவல் கூவுது! | 29 |
| 9. | வழி பிறந்தது | 32 |
| 10. | செய்யுள் பகுதி | |
| | ஆத்திசூடி ★ | 39 |
| | ★மனப்பாடப்பகுதி | |


## ENGLISH (41–81)


| Unit | Title | Page No. |
|---|---|---|
| 1. | Prose : OUR SCHOOL | 43 |
| | Poem : GO TO SCHOOL | 51 |
| 2. | Prose : NO MORE FEAR | 55 |
| | Poem : I'M FINE | 63 |
| 3. | Prose : BLACK IS BEAUTIFUL | 67 |
| | Poem : MUSIC OF THE FROGS | 78 |

## கணக்கு (82 – 137)


| அலகு | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | வடிவங்களில் அமைப்புகள் | 83 |
| 2. | எண்கள் | 92 |
| 3. | எண்களை ஒப்பிடுதல் | 103 |
| 4. | கூட்டல் | 116 |
| 5. | நீட்டலளவை | 131 |


## சூழ்நிலையியல் (138 – 176)


| பாட எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மரம், செடி, கொடி | 139 |
| 2. | பறக்கலாம் வாங்க...! | 152 |
| 3. | விலங்குகள் | 159 |
| 4. | நமது உடல் | 171 |

# தமிழ்

## இரண்டாம் வகுப்பு

## முதல் பருவம்


பாடநூல் குழு

குழுத்தலைவர்

முனைவர் வெ. உஷாராணி, முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி.

மேலாய்வாளர்கள்

சு.ஆ. சங்கீதா, உதவிப் பேராசிரியர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை – 600 006.

இரா. பத்மநாபன், முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், வடலூர், கடலூர்.

தி. குறள்மதி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், பாலக்கோடு , தருமபுரி - 636808.

வல்லுநர்கள்

த. தனுஷ்கோடி, முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்–630551

எ. முத்துக்கிருஷ்ணன், (மேனாள் கல்விப் பேரவைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்)
முதுநிலை விரிவுரையாளர், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம், திரூர் –602 025,திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

மு. சரஸ்வதி, இடைநிலை ஆசிரியர் ,ஊ. ஒ. ந. நி. பள்ளி, செம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்- 603108.

செ. மகேஸ்வரி, இடைநிலை ஆசிரியர், சென்னைத் தொடக்கப் பள்ளி, காக்ரேன் பேசின் சாலை, சென்னை -21.

ஏ. அருள் துரைசாமி, முதுகலைத் தமிழாசிரியர், அம்பேத்கார் அரசு மேனிலைப் பள்ளி, புரிச்சம்பாக்கம், விழுப்புரம்.

ச. ந. தட்சிணாமூர்த்தி, முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளி, திருத்தணி, திருவள்ளூர்.

ச. ஜீவஜோதி, இடைநிலை ஆசிரியர், நகராட்சித் தொ. பள்ளி, திரு. வி. க. பாதை, அம்மாபேட்டை, சேலம்.

கா. ஜோதிலட்சுமி, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, தொட்டபெட்டா, கிருஷ்ணகிரி மாவட்டம்.



---


ஓவியம்: அரஸ்

வடிவமைப்பு : எஸ். மாரிஸ்


| திறன் பகுதி | திறன் | பாடப்பகுதி |
|---|---|---|
| கேட்டல் | இயற்கை சார்ந்த பாடல்களைக் கேட்டறிதல்<br>சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டறிதல்<br>குழு அறிமுக உரையாடலைக் கேட்டறிதல் | 1. கன்றும் (பாடல்)<br>8. சேவல் கூவுது (பாடல்)<br>6. வீடு எங்கே ?<br>3. யார் ? யார் ? யார் ? (பாடல்)<br>7. என்னைப் பற்றி நானே... |
| பேசுதல் | படக் கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல் | 2. பந்து எங்கே ?<br>4. தவளையின் தந்திரம் |
| படித்தல் | படங்களோடு கூடிய சொற்களைப் படித்தல்<br>எளிய சந்தப் பாடல்களைப் பாடுதல்<br>உரிய ஒலிப்புடன் உரக்கப் படித்தல்<br>சிறுவர் படக்கதைகளைப் படித்தல் | 5. பார்ப்போம் படிப்போம்<br>8. சேவல் கூவுது (பாடல்)<br>பயிற்சிகள்<br>9. வழி பிறந்தது |
| எழுதுதல் | படங்களைப் பார்த்துப் பெயரை எழுதுதல்<br>படங்களைப் பார்த்துச் சிறுதொடர் எழுதுதல்<br>சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுதல் | 5. பார்ப்போம் படிப்போம்<br>படம் பார்த்துத்<br>தொடர்எழுதுக<br>பயிற்சிகள் |
| படைப்பாற்றல் | விரும்பிய படம் வரைந்து<br>வண்ணம் தீட்டுதல்<br>பெருவிரல் அச்சிலிருந்து<br>உருவங்கள் உருவாக்குதல்.<br>கதை கூறுதல்<br>செயல்திட்டம் | படம் வரைந்து<br>வண்ணம் தீட்டி மகிழ்க<br>விரலில் 'மை' தொட்டு<br>அச்சிட்டு மகிழ்க<br>பயிற்சிகள் |
| நடைமுறை இலக்கணம் | ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்குதல் | பயிற்சிகள் |
| தானே கற்றல் | சொற்களை அகரவரிசைப்படுத்துதல் | பயிற்சிகள் |
| சொற் களஞ்சியப் பெருக்கம் | எதிர்ச்சொற்கள் அறிதல்<br>செய்யுள் பகுதி | பயிற்சிகள்<br>ஆத்திசூடி |

# 1. பசுவும் கன்றும்



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி.

அம்மா என்குது
வெள்ளைப் பசு – உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி.



நாவால் நக்குது
வெள்ளைப் பசு – பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக் குட்டி.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு – மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி.

– கவிமணி தேசிக விநாயகம்

## பயிற்சிகள்

அ) வாய்மொழியாக விடை தருக.

1. பசு எங்கு மேய்ந்தது ?
2. கன்றுக்குட்டி என்னென்ன செய்தது ?
3. பசு, எவ்வாறு கன்றுக்குட்டியிடம் அன்பு காட்டியது ?

ஆ) பொருள் அறிக.

அண்டையில் – பக்கத்தில்

இ) நிரப்புக.

பூனை – பூனைக்குட்டி


நாய் – ______________


முயல் – ______________

பசு – ______________

விலங்குகள், பறவைகள் பற்றிய பாடல்களைக் கேட்டறிந்து பாடுக.

ஈ) விரலில் மையைத் தொட்டு அச்சிட்டு மகிழ்க.



உ) கொடுக்கப்பட்ட சொற்களுக்கேற்ப விரலில் மையைத் தொட்டு அச்சிடுக.


வண்ணத்துப்பூச்சி  மீன்

யானை  கோழிக்குஞ்சு

ஊ) விரலில் வண்ண மையைத் தொட்டு விருப்பம்போல் அச்சிட்டு மகிழ்க.

## 2. பந்து எங்கே...!


படத்தைப் பார்த்து நிகழ்வைக் கூறுக.




①



②



③



④

## பயிற்சிகள்

அ) கதைக்கேற்பப் படங்களுக்கு வரிசை எண் இடுக.




○ ○ ○ ○

கதை நிகழ்வை உன் பெற்றோரிடம் கூறி மகிழ்க.

ஆ) வண்ணம் தீட்டி மகிழ்க.










இ) தமிழ் நெடுங்கணக்கு வரிசை அறிக.

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# 3. யார், யார், யார்?



தொங்க விட்ட சட்டையைத்
தூக்கிக் கீழே போட்டவன்
யார், யார், யார்?
எழுதி வைத்த தாள்களை
இங்கும் அங்கும் இறைத்தவன்
யார், யார், யார்?
சன்னல் கதவைப் பட்டெனச்
சாத்தி விட்டுச் சென்றவன்
யார், யார், யார்?
அருகில் நிற்கும் மரங்களை
அசைத்தே ஆடச் செய்தவன்
யார், யார், யார்?
கண்டு
பிடிக்க
முடியுமா?
காண
முடியாக்
காற்றே தான்.

– அழ. வள்ளியப்பா

## பயிற்சிகள்

### அ) வாய்மொழியாக விடை தருக.

காற்று என்னவெல்லாம் செய்தது?

### ஆ) பொருள் அறிக.

| | | |
|---|---|---|
| தூக்கி | – | எடுத்து |
| காண முடியாத | – | பார்க்க முடியாத |
| அருகில் | – | பக்கத்தில் |


### இ) எதிர்ச்சொல் அறிக.

| | | |
|---|---|---|
| இங்கும் | x | அங்கும் |
| அருகில் | x | தொலைவில் |
| கீழே | x | மேலே |

ஈ) யாருடைய காலடி ? கண்டுபிடித்துக் காலடிச் சுவடுகளை உருவத்துடன் பொருத்துக.



உ) வண்ணம் தீட்டி மகிழ்க. பழங்களின் பெயர்களை எழுதுக.



ஊ ) சொல்லிக் கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டும் எழுதுக.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| | | | | | | | | | | | | |

| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |


| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |

| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |


# 4. தவளையின் தந்திரம்

படத்தைப் பார்த்து நிகழ்வைக் கூறுக.



- கதை நிகழ்வை உன் பெற்றோரிடம் கூறி மகிழ்க.
- பெற்றோரிடமிருந்து எளிய கதைகளைக் கேட்டறிக.
- கேட்டவற்றை வகுப்பறையில் கூறுக.

படத்திலுள்ள நிகழ்வுகளைப் பற்றிப் பேசுக.



குறிப்பு : மாணவர்கள் முழுமையான தொடர்களைப் பயன்படுத்தி இயல்பாகப் பேசும் வகையில் ஆசிரியர் சிறு சிறு வினாக்கள் கேட்கவும்.

# 5. பார்ப்போம் படிப்போம்



பொம்மை



கறிவேப்பிலை



மேசை



செம்பருத்தி



வேப்பமரம்



வானவில்



செல்பேசி



மௌவல்



உருளைக்கிழங்கு



வெண்டைக்காய்




வளையல்



அகல்விளக்கு



உண்டியல்



பௌவம்

உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.



செங்காந்தள்



குவளை



வெட்சி



வாகை



வகுளம்



ஆவிரை



செண்பகம்



முல்லை



கைதை



கொன்றை



ஆத்தி



அவரை

## பயிற்சிகள்


அ) படத்துடன் பெயரைப் பொருத்துக.



பூங்கா



மடிக் கணினி




வானூர்தி



முழுநிலவு



ஒட்டகச்சிவிங்கி



பேருந்து

ஆ) படம் பார்த்துப் பெயர் எழுதுக.

(சாமந்திப்பூ, தொலைபேசி, நீர்யானை, பள்ளி, கடற்கரை, ஊஞ்சல், கத்தரிக்காய், வாழைப்பழம், தொட்டில், தென்னை மரம்.)

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

 ________________

இ) பள்ளிக்குச் செல்லும் வழியில் நீ பார்த்த பொருள்களின் பெயர்களை எழுதுக.

1. ________________ 2. ________________

3. ________________ 4. ________________

5. ________________ 6. ________________

ஈ) படம் பார்த்துப் பெயர் எழுதுக.

















உ) சொற்றொடரைப் படித்துப் பழகுக.



வண்ணத்துப்பூச்சி அழகானது.



பாகற்காய் உடலுக்கு நல்லது.



மீனவர் மீன் பிடிக்கிறார்.



மருத்துவர் பரிசோதிக்கிறார்.



மிதிவண்டியில் பள்ளி செல்லலாம்.



நெசவாளர் துணி நெய்கிறார்.



பழச்சாறு, சத்துமிக்கது.



குதிரை, வண்டி இழுக்கிறது.



தொடர்வண்டி நீளமாக இருக்கும்.



முருங்கைக்கீரை உடலுக்கு நல்லது.



பலாப்பழம் இனிக்கும்.



யாழ் பழங்கால இசைக்கருவி.



நத்தை மெதுவாக நகரும்.



நமது நாட்டுக்கொடி
மூன்று வண்ணங்கள் உடையது.

ஊ) படத்திற்குப் பொருத்தமான சொற்களை எழுதித் தொடர்களை நிரப்புக.



____________________ தோகை விரித்து ஆடுகிறது.



____________________ புத்தகம் படிக்கிறார்கள்.



____________________ விரைவாக ஓடுகிறது .




____________________ விளையாடுகிறார்கள்.



____________________ குளத்தில் குளிக்கிறது .

எ) கீழ்க்காணும் சொற்களைக் கட்டங்களில் நிரப்புக.

ஒட்டகம், பட்டம், காடி, காகம், கழுகு, குளவி.



# 6. வீடு எங்கே!

குட்டிக்குரங்கு வீடு கட்டியது.

தோசைதான் வீட்டின் தரை!

வாழைப்பழங்களே வீட்டின் தூண்கள்.

வெல்லம் தான் சுவர்.

முறுக்குதான் சன்னல்.

அப்பளமே கூரை.

எறும்பு வந்தது,

எலி வந்தது,

பூனை வந்தது,

காகம் வந்தது,

வீடு எங்கே போனது!



## பயிற்சிகள்

அ) வாய்மொழியாக விடை தருக.

1. வீடு கட்டியது யார்?
2. குட்டிக்குரங்கு கட்டிய வீட்டிற்கு யாரெல்லாம் வந்தார்கள்?

ஆ) நிரப்புக.

குரங்கு கட்டிய வீட்டின் தரை – தோசை

தூண்கள் – ___________

சுவர் – ___________

சன்னல் – ___________

கூரை – ___________

இ) சொல்லிக்கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டும் எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| வீடு | தரை | தூண்கள் | சுவர் | சன்னல் |
| ________ | ________ | ________ | ________ | ________ |
| கூரை | எறும்பு | எலி | பூனை | காகம் |
| ________ | ________ | ________ | ________ | ________ |

ஈ) விடுகதைக்கு விடை கூறுக.



1. கை உண்டு; பிடிக்க முடியாது
   கால் உண்டு; நடக்க முடியாது.
   – அது என்ன ?




2. படுத்து உறங்காத மிருகம்
   பந்தயத்தில் ஓட்டம் அதிகம்.
   – அது என்ன ?



3. சீப்பு உண்டு; தலை வார முடியாது;
   பூ உண்டு; மாலை கட்ட உதவாது.
   – அது என்ன ?




4. ஒற்றைக்காது உடையவன்; ஒல்லியான மனிதன்;
   ஓடி ஓடி இணைப்பான்.
   – அவன் யார் ?




5. ஆகாய நீர் கொட்டும்போது
   ஆளைக் காக்க மலருவான்.
   – அவன் யார் ?

⊛ உனக்குத் தெரிந்த விடுகதைகளைக் கூறுக.


# 7. என்னைப் பற்றி நானே...





கோடை விடுமுறை முடிந்தது. பள்ளியின் முதல் நாள். மாணவர்கள் மகிழ்ச்சியோடு பள்ளிக்கு வந்தார்கள். மணி ஒலித்தது. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார். மாணவர்கள் எழுந்து நின்று, ஆசிரியருக்கு வணக்கம் சொன்னார்கள்.

ஆசிரியர் முதலில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவ்வகுப்பில் கபிலன், எழிலரசி என்னும் இருவரும் புதிதாகச் சேர்ந்திருந்தார்கள். அவர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.



கபிலன் : என் பெயர் கபிலன். என் ஊர் தருமபுரி. நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு மட்டைப்பந்து விளையாட மிகவும் பிடிக்கும். எங்கள் வீட்டில் ஒரு நாய் வளர்க்கிறோம். அதன் பெயர் 'சின்னு.' அது ரொட்டித்துண்டுகளை விரும்பித் தின்னும். சின்னுவுடன் விளையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும்.



எழிலரசி : என் பெயர் எழிலரசி. எனது ஊர் காஞ்சிபுரம். நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு ஓவியம் வரைய மிகவும் பிடிக்கும். நான் ஒரு பூனைக்குட்டி வளர்க்கிறேன். அது கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறத்தில் அழகாக இருக்கும். அதைப் 'பட்டு' என்று செல்லமாக அழைப்போம். பட்டுவுக்கு மிகவும் பிடித்தது பால்சோறுதான்.

இதேபோல், வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

## பயிற்சிகள்

அ) எதிர்ச்சொல் அறிக.

| | | |
|---|---|---|
| தொடங்கியது | x | முடிந்தது |
| பழைய | x | புதிய |
| பிடிக்கும் | x | பிடிக்காது |

ஆ) நீ உன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்வாய்? கூறுக.

இ) இவை பேசினால் தம்மை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொள்ளும் ?

கபிலனின் நாய்



என் பெயர் சின்னு.
நான் ரொட்டித் துண்டுகளை
விரும்பித் தின்னுவேன்.
கபிலனுடன் விளையாடுவது
எனக்கு மிகவும் பிடிக்கும்.

எழிலரசியின் பூனை



______________________________

______________________________

______________________________

______________________________

ஈ) சொல்லிக்கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டும் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | மட்டைப்பந்து | ஓவியம் | அறிமுகம் |
| ________ | ________ | ________ | ________ |
| கோடை விடுமுறை | மாணவர்கள் | மணி ஒலித்தது | மிகவும் பிடிக்கும் |
| ________ | ________ | ________ | ________ |

உ) தொடர்களை உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக, எழுதுக.

1. நாள்தோறும் பல் துலக்குவோம். ______________________
2. தூய ஆடைகளை அணிவோம். ______________________
3. காலணி அணிந்து நடப்போம். ______________________
4. நகத்தைத் தூய்மையாக வைத்திருப்போம். ______________________
5. சத்துள்ள உணவுகளை உண்போம். ______________________
6. குடிநீரைக் காய்ச்சிக் குடிப்போம். ______________________
7. கூடி விளையாடுவோம். ______________________
8. வரிசையில் நிற்போம். ______________________
9. உயிர்களிடம் அன்பாய் இருப்போம். ______________________
10. மழைநீரைச் சேமிப்போம். ______________________

ஊ) குறிப்புகளைப் பயன்படுத்தித் தொடர்களை நிறைவு செய்க.





( பூனை, நாய், அவரை, எறும்பு )

1. ____________ வீட்டைக் காக்கும்.
2. ____________ எலியைப் பிடிக்கும்.
3. ____________ ஊர்ந்து செல்லும்.
4. ____________ கொடியில் காய்க்கும்.





எ) கீழ்க்காணும் சொற்களை வகைப்படுத்துக.

புறா, குரங்கு, மல்லிகை, கோழி, செம்பருத்தி, சிங்கம், கழுகு, அல்லி, முள்ளம்பன்றி, தாமரை, யானை, காகம், சாமந்தி, கிளி, ஒட்டகம்.

| பூக்கள் | விலங்குகள் | பறவைகள் |
|---|---|---|
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |

# 8. சேவல் கூவுது!



கூரை ஏறி வீரன் போலக்
கொண்டைச் சேவல் கூவுது! – தீக்
கொண்டைச் சேவல் கூவுது!
ஊரை எழுப்பி விட்டுப் பின்னும்
யாரை எழுப்பக் கூவுது! – இன்னும்
யாரை எழுப்பக் கூவுது?



கூரை மீது நடை நடந்து
குனிந்து நிமிர்ந்து பார்க்குது! – செங்
கொண்டை குலுக்கி ஆர்க்குது!
போருக் கேகும் மறவன் போல
யாருக் காக நடக்குது? – சேவல்
யாருக்காக நடக்குது?

– வாணிதாசன்

## பயிற்சிகள்

### அ) பொருள் அறிக.

குலுக்கி – அசைத்து
ஆர்க்குது – கொக்கரிக்கிறது
ஏகும் – செல்லும்
மறவன் – வீரன்

### ஆ) எதிர்ச்சொல் அறிக.

ஏறி x இறங்கி
குனிந்து x நிமிர்ந்து

### இ) விடை தருக.

1. கொண்டைச் சேவல் எப்படிக் கூவுகிறது?
2. சேவல் யாரைப்போல நடக்கிறது?

### ஈ) சொல்லிக் கொண்டே எழுதுக. சொல்லக்கேட்டும் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| கூரை | வீரன் | மறவன் | கொண்டைச் சேவல் |
| ________ | ________ | ________ | ________ |
| குனிந்து | நிமிர்ந்து | ஆர்க்குது | யாருக்காக |
| ________ | ________ | ________ | ________ |

தமிழ்

உ) உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.

ஆற்றில் வருவது வெள்ளம்.
இனிப்பாய் இருப்பது வெல்லம்.

மரத்தை அறுப்பது வாள்.
மாட்டிற்கு இருப்பது வால்.

வீட்டில் வளர்ப்பது கோழி.
விளையாட உதவுவது கோலி.

வனத்தில் இருப்பது புலி.
மரத்தில் காய்ப்பது புளி.

ஒன்றில் பாதி அரை.
வீட்டில் உள்ளது அறை.

சுவரில் இருப்பது பல்லி.
கல்வி தருவது பள்ளி.

சூரியன் உதிப்பது காலை.
ஏரில் பூட்டுவது காளை.

நீரைத் தருவது மழை.
நிமிர்ந்து நிற்பது மலை.

ஆற்றின் ஓரம் கரை.
ஆடையில் படிவது கறை.

மாதத்தில் ஒன்று ஆனி.
மரத்தில் அடிப்பது ஆணி.

ஊ) சொல்லிக் கொண்டே எழுதுக. சொல்லக் கேட்டும் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வெள்ளம் | வெல்லம் | வாள் | வால் |
| ________ | ________ | ________ | ________ |
| கோழி | கோலி | புலி | புளி |
| ________ | ________ | ________ | ________ |
| அரை | அறை | பல்லி | பள்ளி |
| ________ | ________ | ________ | ________ |
| காலை | காளை | மழை | மலை |
| ________ | ________ | ________ | ________ |
| கரை | கறை | ஆனி | ஆணி |
| ________ | ________ | ________ | ________ |

ஏ) எழுத்துகளை இணைத்துச் சொல் உருவாக்குக.

| | | |
|---|---|---|
| ஊ / போ | ட் | டி |

ஊட்டி
போட்டி

| | | |
|---|---|---|
| பா | ட் | டு / டி |

____________________
____________________

| | | |
|---|---|---|
| க | த / ன | வு |

____________________
____________________

| | | |
|---|---|---|
| பூ | ண் / ட் | டு |

____________________
____________________

| | | |
|---|---|---|
| பு | ட | வை / லை |

____________________
____________________

| | | | |
|---|---|---|---|
| வி / ம | ரு | ந் | து |

____________________
____________________

ஏ) எழுத்துகளை இணைத்துச் சொல் உருவாக்குக.

கா — து, டு, ல், சு, ளை

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________

மு, சொ, கொ, ம, ப — த்து

1. ____________
2. ____________
3. ____________
4. ____________
5. ____________


# 9. வழி பிறந்தது






மூவரும் ஆற்றைக் கடந்தனர்.










காற்றும் நின்றது.




❀ நீ பிறருக்கு உதவி செய்திருக்கிறாயா? என்ன உதவி? யாருக்கு? கூறுக.

## பயிற்சிகள்



அ) படத்தைப் பார்! சரியான சொல்லை எழுதுக.

- சேவல், கூரையின் ______________ உள்ளது.
  கோழி, மரத்தின் ______________ உள்ளது.

  மேலே, கீழே

- வாழைமரம், வீட்டின் ______________ உள்ளது.
  தென்னைமரம், வீட்டின் ______________ உள்ளது.

  முன்புறம், பின்புறம்

- குரங்கு, மரத்தில் ______________ செல்கிறது.
  அணில், மரத்தில் இருந்து ______________ வருகிறது.

  ஏறி, இறங்கி


- பூனை, வீட்டிற்கு ______________ ஓடுகிறது.
  நாய், வீட்டிற்கு ______________ குரைக்கிறது.

  உள்ளே, வெளியே

- யானை, உருவத்தில் ______________
  பூனை, உருவத்தில் ______________

  சிறியது, பெரியது

ஆ) படத்தைப் பார்த்துப் பறவைகள், விலங்குகளின் பெயர்களை எழுதுக.



இ) உனக்குத் தெரிந்த பறவைகள், விலங்குகளின் பெயர்களை எழுதுக.


ஈ) கொடுக்கப்பட்டுள்ள படங்களின் பெயர்களை உரிய கட்டங்களில் நிரப்புக.


இடமிருந்து வலம்






மேலிருந்து கீழ்







மேலிருந்து கீழ்





இடமிருந்து வலம்





உ) இரண்டாவது எழுத்தை நீக்கிப் புதிய சொல்லை உருவாக்குக.

நாடகம் – நாகம்

பழக்கம் – ____________.

புதையல் – ____________.

மகுடம் – ____________.

பாக்கு – ____________.

ஊ) கீழ்க்காணும் சொற்களைக் **ககர** வரிசையில் எழுதுக.

கேளூர், கிண்டி, கோவை, குன்னூர், கடலூர், கீரனூர், காரைக்குடி, கைலாயபுரம், கெடிலம், கொடுமுடி, கூடலூர், கௌதமபுரி.



| | | | |
|---|---|---|---|
| க | ____________ | கெ | ____________ |
| கா | ____________ | கே | ____________ |
| கி | ____________ | கை | ____________ |
| கீ | ____________ | கொ | ____________ |
| கு | ____________ | கோ | ____________ |
| கூ | ____________ | கௌ | ____________ |


எ) கீழ்க்காணும் சொற்களைத் **தகர** வரிசையில் எழுதுக.

தங்கம், திண்ணை, தூண், தைலம், தாமரை, தேன், தீ, தென்னை, தோட்டம், தொழில், தும்பி.


| | | | |
|---|---|---|---|
| த | ____________ | தெ | ____________ |
| தா | ____________ | தே | ____________ |
| தி | ____________ | தை | ____________ |
| தீ | ____________ | தொ | ____________ |
| து | ____________ | தோ | ____________ |
| தூ | ____________ | | |


ஏ) அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ள படங்களுக்குரிய சொற்களை எழுதுக. படங்களுக்கு வண்ணம் தீட்டி மகிழ்க.




________ ________ ________ ________






________ ________ ________ ________



________ ________ ________ ________

❖ செயல் திட்டம்

❖ அகர வரிசையில் கொடுக்கப்பட்டுள்ள படங்களைத் தனித்தாளில் வரைக.

❖ அவற்றுக்கு வண்ணம் தீட்டுக. படத்தொகுப்பில் ஒட்டுக.

❖ அப்படத்தொகுப்பை உன் பெற்றோரிடமும் நண்பர்களிடமும் காட்டி மகிழ்க.

# செய்யுள் பகுதி

## ஆத்திசூடி ★



அறம் செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்.
எண் எழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டு உண்.
ஒப்புரவு ஒழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.

— ஔவையார்

அ) பொருள் அறிக.

| | | |
|---|---|---|
| அறம் | – | நல்ல செயல்கள் |
| ஆறுவது | – | தணிவது |
| கரவேல் | – | மறைக்காதீர் |
| ஈவது | – | கொடுப்பது |
| விளம்பேல் | – | சொல்லாதீர் |
| ஊக்கம் | – | முயற்சி |
| இகழேல் | – | வெறுக்காதீர் |
| ஒப்புரவு | – | உலகத்தோடு சேர்ந்து வாழ்தல் |
| ஓதுவது | – | படிப்பது |
| ஔவியம் | – | பொறாமை |

ஆ) பேசுக.

1. நீ, உன் நண்பனுக்கு உதவி செய்துள்ளாயா ? என்னென்ன உதவி செய்துள்ளாய் ?
2. உனக்குச் சினம் ஏற்படுமா ? எப்பொழுதெல்லாம் சினம் கொள்வாய் ?
3. நீ, வீட்டில் எப்பொழுதெல்லாம் பாடங்களைப் படிப்பாய் ?